

# புனித லூர்து மாதா தேவாலயம்



45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org

**திருத்தந்தையின் கருத்து: ஆன்மீக பகுத்தறிதலில் உருவாக்கம்: திருச்சபை, தனிப்பட்ட அளவிலும், சமூகத்துவ அளவிலும் ஆன்மீக பகுத்தறிதலுக்கான உருவாக்கத்தின் அவசரத்தை பாராட்ட வேண்டுமென்று**

**மார்ச் மாத கரு : கிறிஸ்துவில் நம் மறைப்பரப்பு ஆர்வம்**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| மார்ச் 4 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>மாலை 6.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம)<br>திருப்பலி (த) | தவக்கால 3ஆம் ஞாயிறு<br>தவக்கால 3ஆம் ஞாயிறு- முதலாம் சடங்கு<br>புனித செபஸ்தியார் சிற்றாலயம், முனிசிபல் |
| மார்ச் 5 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | தவக்கால வாரநாள் |
| மார்ச் 6 செவ் | காலை 6.30<br>காலை 9.30 | திருப்பலி (ஆ)<br>திருப்பலி (ஆ, த) | தவக்கால வாரநாள்<br>மூத்தோர் பணிக்குழு திருப்பலி @ பெர். மை |
| மார்ச் 8 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | தவக்கால வாரநாள் |
| மார்ச் 9 வெள் | மாலை 7.30 | சிலுவைப்பாதை (த, ஆ)/ திருப்பலி (த) | தவக்கால வாரநாள் |
| மார்ச் 10 சனி | காலை 6.30<br>காலை 9.00 | திருப்பலி (ஆ)<br>திருப்பலி (ஆ) | தவக்கால வாரநாள்<br>மாற்றுத்திறன் படைத்த குழந்தைகளுக்கான திருப்பலி |
| மார்ச் 11 ஞா | காலை 7.00<br>காலை 9.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம) | தவக்கால 4ஆம் ஞாயிறு<br>தவக்கால 4ஆம் ஞாயிறு- இரண்டாம் சடங்கு |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| மார்ச் 4 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 12.00<br>மதியம் 12.15 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம்<br>பெர். மை 2-2 | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி<br>மறைக்கல்வி ஆசிரியர்கள் கூட்டம் |
| மார்ச் 5 திங் | மாலை 7.30<br>மாலை 8.00 | பெர். மை 2-2<br>பெர். மை 1-3 | RCIA – உறுதிபூசுதல் வேட்பாளர்கள் & ஆதரவாளர்கள்<br>புலூமா மகளிர் குழு கூட்டம் |
| மார்ச் 6 செவ் | காலை 8.30<br>மாலை 8.00<br>மாலை 8.00 | பெர். மை 1-3<br>பெர். மையம்<br>முனிசிபல் | பங்கு பரிந்துரை குழு<br>பங்கு தலைவர்கள் உருவாக்கம் (அதிச & பணிக்குழு)<br>அருங்கொடை (த) |
| மார்ச் 7 புதன் | மாலை 8.00<br>மாலை 8.00 | ஆலயம்<br>பெர். மை 1-1 | புனித அகஸ்டின் பாடல்குழு பயிற்சி (த)<br>அருங்கொடை (த) |
| மார்ச் 8 வியா | மாலை 7.00<br>மாலை 7.30<br>மாலை 8.00 | ஆலயம்<br>பெர். மை 2-2<br>பெர். மை 1-3 | முன்னோன் வாசகர் பயிற்சி<br>RCIA<br>எழுப்புதல் குணமளிப்பு செபமாலை |
| மார்ச் 9 வெள் | மதியம் 2.45 | புபிஅ சிற்றாலயம் | சிலுவைப்பாதை (த, ஆ) |
| மார்ச் 10 சனி | மாலை 5.30/6.00 | ஆலயம் | செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| மார்ச் 11 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>காலை 10.30<br>மதியம் 12.00 | பெர். மையம்<br>பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>அனைத்துலக மகளிர் தின கொண்டாட்டம்<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி |

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (தமிழ்):** 17 மார்ச் 2018 (சனி) @ மாலை 4.30க்கு நடைபெறும். மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**2. சிறார்களுக்கான சிலுவைப்பாதை:** அனைத்து ஆரம்ப பள்ளி மறைக்கல்வி மாணவர்கள் கலந்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். நாள்: 11 மார்ச் 2018 (ஞாயிறு) நேரம்: காலை 11.00 இடம்: ஆலயம்

**3. உறவாடும் குடும்பம் & WORD AMONG US:** மாத இதழ்கள் வீணாவதைத் தடுப்பதற்காக நாம் இவற்றின் எண்ணிக்கையை குறைத்துள்ளோம். மாத இதழ்கள் உங்களுக்குத் தேவைப்பட்டால், நீங்கள் பெயர்களை பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யலாம். நீங்கள் பங்கு அலுவலகத்தில் பணத்தை செலுத்தி மாத இதழ்களான இந்த வெளியீடுகளைப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் விண்ணப்பங்களை வரும் மார்ச் 11க்குள் சமர்பித்துவிடவும். இதற்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**4. பாப்பரசர் நம்மை செபிக்க அழைக்கிறார்:** "ஆண்டவருக்காக 24 மணி நேரம்" எனும் பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் அழைப்பிற்கேற்ப, தேவநற்கருணை ஆராதனை 9 மார்ச் 2018, வெள்ளிக்கிழமை திருப்பலிக்குப் பிறகு தொடங்கும். நள்ளிரவில் தேவநற்கருணை ஆராதனையை நாம் நிறைவு செய்வோம்.

**5. படிவம் 5 பயிலும் மாணவர்களுக்கான சீபூத்தே குடியேற்றவாசிகளின் குடியிருப்புக்கு சுற்றுலா:**
**நாள்:** 4 மார்ச் 2018 (ஞாயிறு) நேரம்: காலை 9.00 ~ மாலை 6.00 வரை. அவர்களுக்காக செபியுங்கள்.

**6. சோய்ஸ் தமிழ் பினாங்கு 27: நாள்**: 15~18 மார்ச் 2018 **நேரம்:** மாலை 7.00 (வியாழன்) ~ மாலை 5.00 (ஞாயிறு)
**இடம்:** புனித ஜஸ்டன் & இம்பரட், பிறை **இறுதி நாள்:** 9 மார்ச் 2018 **தொடர்புக்கு:** ஏனி (016-9540417)

**7. 2018 தவக்கால பிரச்சார நிகழ்வுகள்: 4வது வாரம் (11 மார்ச் 2018)** - மனித மரியாதையை நிலைநிறுத்துவோம்.
அதிச அளவில்- யாரேனும் தனியாக/ நோயுற்று/ குடும்பமின்றி வாழ்கிறார்களா என்பதைக் கவனியுங்கள்.
**6வது வாரம் (25 மார்ச் 2018)** - உணவுப்பொருள் விநியோகம் (நினைவூட்டல்: அதிச தலைவர்கள் பெயர்களை (ஏழைக் குடும்பம்) 23 மார்ச் 2018க்குள் பங்கு அலுவலகத்தில் சமர்பிக்கவும்).

**8. அனைத்துலக மகளிர் தின கொண்டாட்டம்:** 11/3/18 (ஞாயிறு) காலை 10.30 ~ மதியம் 1.00 வரை புலூமா தேவாலயத்தில் நடைபெறும்.

**9. மூத்தோர் பணிக்குழு:** அடுத்த ஒன்றுகூடுதல் 6/3/18 (செவ்) காலை 9.30க்கு பெர். மையத்தில் திருப்பலியுடன் தொடங்கும். 60 வயதுக்கு மேற்பட்ட பங்கு மக்கள் கலந்துக்கொள்ள விருப்பமுள்ளவர்கள் பெயர்களை பங்கு அலுவலகத்தில் 4/3/18 (ஞாயிறு) முன்பாக பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். தொலைபேசி வழியாகவும் பெயர்களை பதிவு செய்யலாம்.

**10. பெற்றோர் ஆதரவுக் குழு:** மாற்றுத்திறன் படைத்த குழந்தைகளுக்கு சிறப்பு ஆசீர்வாதங்களும், திருப்பலியும் 10/3/18 @ காலை 9.00க்கு(சனி) நடைபெறும். சிறப்பு குழந்தைகளும், பெற்றோர்களும் (குடும்பங்கள்) இந்த திருப்பலியில் கலந்துக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**11. தம்பூன் கல்லறை சுத்தம் செய்தல்:** கல்லறை பராமரிப்பு குழு எதிர்வரும்10/3/18 (சனி) காலை 9.00 ~ மதியம் 12.00 வரை தம்பூன் கல்லறையை சுத்தம் செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளது. மூன்று பங்குகளும் இணைந்து செயல்படும் இந்நிகழ்வில் லூர்து அன்னை பங்கு மக்களாகிய நாமும் இணைந்து ஒத்துழைக்க கடமைப்பட்டுள்ளோம். ஆர்வமுள்ள தன்னார்வலர்கள் உங்கள் பெயர்களை 4/3/18 ஞாயிறு திருப்பலிகளுக்கு பிறகு பங்கு மண்டபத்தில் பதிவு செய்யலாம்.

**12. தவக்கால ஒப்புரவு சடங்கு**

| | | |
|---|---|---|
| மார்ச் 6 (செவ்) | இரவு 7.00 | புனித சூசையப்பர் ஆலயம், பத்து காஜா |
| மார்ச் 8 (வியா) | இரவு 7.30 | புனித பிதேசா ஆலயம், சித்தியாவான் |
| மார்ச் 12 (திங்) | இரவு 8.00 | புனித மைக்கேல் ஆலயம், ஈப்போ |
| மார்ச் 13 (செவ்) | இரவு 8.00 | புனித சகாய மாதா தேவாலயம், ஈப்போ கார்டன் |
| **மார்ச் 14 (புதன்)** | **இரவு 7.30** | **புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ** |
| மார்ச் 15 (வியா) | இரவு 7.00 | புனித ஞானப்பிரகாசியார் ஆலயம், தைப்பிங் |

**13. பினாங்கு மறைமாவட்ட இளைஞர் தினம் (PDYD 4): நாள்**: 16 ~ 17 ஜூன் 2018 (சனி & ஞாயிறு) **நேரம்:** மதியம் 12.00~ மதியம் 12.00 **இடம்:** கிறிஸ்து அரசர் ஆலயம், சுங்கை பட்டாணி. **ஒருமை பகிர்வு:** ரிம 50/-. **பதிவுக்கு இறுதி நாள்:** 31/3/18. **தொடர்புக்கு:** பினாங்கு மறைமாவட்ட இளைஞர் கட்டமைப்பு (04-2274851) **மின்னஞ்சல்:** pdyn@pgdiocese.org.
பிமஇதி 4- க்கான நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் கொடுக்கலாம்.

**14. ரேச்சலின் திராட்சைதோட்ட ஒடுக்கம்:** பாதுகாப்பில் தங்கி வாழவும், கருக்கலைப்பின் வேதனைகளை கடவுளிடம் ஒப்புக்கொடுக்கவும், அங்கு மன்னிப்பு மற்றும் குணமளிப்பின் வாக்குறுதி உள்ளது என்பதை அறிந்து கொள்ளவும் ஓர் அழைப்பு. பினாங்கில் அடுத்த ஒடுக்கம் 16 ~18 மார்ச் 2018இல் நடைபெறும். நீங்களோ, உங்களுக்கு தெரிந்த யாராகிலும் கருக்கலைப்பினால் தொடப்பட்டிருந்தால் தயவு செய்து அந்தரங்க எண்கள் 016-4190538 சிரில்லா (இரவு 7-9 வரை) அல்லது மின்னஞ்சல்: healinggracerachelsvineyard@gmail.com வழி 6/3/18க்குள் தொடர்பு கொள்ளவும்.

**13. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி பிப்ரவரி 2018 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **383,662.82** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **390,082.39** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**25/02/18 திருப்பலி வசூல்கள்:** **காலை 7.00** - RM 1,362.25 **காலை 9.00** - RM 1,503.55 **காலை 11.00** - RM 139.50
**மொத்தம்** - RM 3,005.30 **2018** - RM 460.00 **கல்லறை** - RM 1,602.20 **அவே சிற்றாலயம்** (18/2/18) - RM 121.20
நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்